1984 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆராய்ச்சி முடிவு பற்றி கோ. 43 நெற் பயிருக்கு சம்பாப் பருவத்தில் இதைப் பயன் படுத்தலாம் என்ற வகையிலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைச் சாண எரிவாயு சாதனத்திலும் பயன்படுத்தலாம், நார்களைத் தனியாகப் பிரித்து எடுக்கலாம். அட்டை தயாரிக்கலாம், என்றெல்லாம் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆகவே உரிய வகையிலே இதைப் பயன்படுத்து வதற்கு அரசு செயல் திட்டத்தை மேற்கொள்ளும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இந்தப் பார்த் தினியம் நச்சுச் செடி என்று நகரங்களிலே, பல இடங்களிலே, கோவை போன்ற இடங்களிலே வந்ததாக மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். அதனாலே பயனுடையது என்று கருதுகிறபோது, ஒரு பெரிய திட்டத்தின் மூலமாக அனைத்துச் செடிகளையும் அப்புறப்படுத்துகிற முயற்சியை அரசு விரைவில் மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 9-40)

மாண்மிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை அப்புறபபடுத்தி பயனற்றதாக ஆக்குவதைவிட, அதையும் ஒரு உரமாகப் பயன்படுத்தலாமே என்பதுதான் அரசினுடைய கருத்து.

செவிலியர் பயிற்சி மாணவி மரணம்.

*93 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில ளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை அரசினர் பொது மருத்துவமனையுடன் இணைந்த செவிலியர் மாணவியர் விடுதியில் தங்கியிருந்த, பயிற்சி பெற்று வந்த மாணவி யர்களில் எவரேனும் 1983-ஆம் ஆண்டு ஆகஸ்ட்-செப்டம்பர் திங்களில் இறந்து போனார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) எமிலி பெர்னான்டஸ் என்ற இரண்டாம் ஆண்டு செவிலியர் பயிற்சி மாணவி ஒருவர் உடல் நலக்குறைவு காரணமாக 1—9—1983 அன்று காலை 8.30 மணிக்கு சென்னை அரசு பொது மருத்துவ மனையில் கால மானார்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உடல் நலக் குறைவு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன உடல் நலக் குறைவு என்று தெரிவிக்க வேண்டும். அரசாங்க மருத்துவ மனையில் 'அட்மிட்' செய்யப்பட்ட பிறகு அளிக்கப்பட்ட சிகிச்சை சரியில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லியிருக்கின்றார்கள். அதைப்பற்றிய விவரங்களை அளிப்பார்களா ?

THE HON. DR. H. V. HANDE: Emily Fernandes, Second Year Nursing Student of the Nursing School attached to Government General Hospital, Madras was admitted at 8.30 a.m. on 30th August 1983 in the Nurses-Pupils Ward No. 39 at Government General Hospital, Madras with the history of head ache. She was given appropriate medicine and was examined by the Doctor of the Unit and also by the Serology Specialist. Unfortunately, she died at 8.30 a.m. on 1st September 1983 despite medical treatment. The report of the Professor of Medicine is also attached.

என்று அந்த ரிப்போர்ட்டில் இருக்கிறது. மருத்துவமனையின் ரிப்போர்ட் இருக்கின்றது. மருத்துவமனையில் சரியான முறையில் சிகிச்சை அளிக்கப் பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் அவர்கள் இறந்து விட்டதாகத் தெரி விக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அந்த மாணவி இறந்ததைப் பற்றி உடனடியாக அந்த மாணவியினுடைய குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும், அதனால் அந்தக் குடும்பத்தினர் அந்த மாணவியை வந்து பார்க்க முடியாமல் போய்விட்டது என்றும் சொல்கின்றார் கள். அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த 'கம்ப்ளெயிண்ட்' கூட என்னிடத்திலே தரப்பட்டது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியபோது, இதுபற்றி விசாரித்தேன். அந்தக் குடும்பத்தினருக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கப்பட்டது என்று எனக்குச் சொன்னார்கள்.

1984 மார்ச் 14]

மரபுவழி மருத்துவர்கள்.

*94. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 31—8—1983 முடிய இந்திய மருத்துவ மத்திய கழகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள மரபுவழி மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவர்களின் திறனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) 31—8—1983 முடிய தமிழ் நாடு இந்திய மருத்துவ மத்திய கழகத்தில் 11,702 மரபுவழி மருத்துவர்கள் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(இ) பெரும்பாலும் பி. 2 வகை (மரபுவழி/பாரம்பரை) மருத்துவர்கள் சொந்தமாக இந்திய மருத்துவ தொழில் செய்பவராவர். இவர்கள் ஊராட்சி, கிராம மருந்தகங்களில் மருத்துவர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள். மேலும் அரசாங்க மருந்தகங்களுக்கு 'ஏ' வகுப்பு மருத்துவர்கள் கிடைக்காத தினால் அம்மருந்தகங்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற பி. 2 பதிவு மருத்துவர்களை (மரபுவழி/பாரம்பரை) ஒப்பந்த அடிப்படையில் மருத்துவா களாக நியமனம் செய்யலாமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. மாசிலாமணி: தலைவர் அவர்களே, மரபு வழி மருத்துவர்கள் என்று சொல்லும்போது, பரம்பரை குலத் தொழிலாகச் செய்து வருகின்ற நாவித சமுதாயத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் இதிலே உள்ளடங்கி இருக்கின் றார்களா? ஆம் எனில், அதிலே எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அவர் களும் இதில் உள்ளடங்கி இருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர்கள் என்று சொல்லவில்லை. இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, 'தமிழ் நாடு போர்ட் ஆஃப் இந்தியன் மெடிசன்ஸ்' என்று இருப்பதில், அவர்கள் பி 2 கிளாஸ், பிராக்டிஷ னர்ஸ், டிரடிஷனலி டிரெயிண்ட், ஹெரிடிடரி பிராக்டிஷனஸ் 31—3—1983-ல், சித்தா பொறுத்தவரையில், பி கிளாஸ் 8,097, சி கிளாஸ் 219, ஆயுர்வேதா பி கிளாஸ் 1,899, சி கிளாஸ் 55, யுனானி பி 2 கிளாஸ் 628, சி கிளாஸ் 4.